புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கம்பராமாயணத்தில் பசுவும் கன்றும்

*முனைவர் க. மங்கையர்க்கரசி*
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி(சுழல்-II)*
*மீனம்பாக்கம், சென்னை.*

## *முன்னுரை*

*பசு மிகவும் சாதுவான வீட்டு விலங்காகும். இந்துக்கள் பசுவை தெய்வமாகவே எண்ணி வழிபடுவர். பசுவின் ஒவ்வொரு பகுதியிலும் முப்பத்து முக்கோடி தெய்வங்களும் வாழ்கிறார்கள் என்பது ஐதீகம். பசு தரும் பால் மற்றும் நெய், சாணம், கோமூத்திரம் முதலியவை வழிபாட்டிற்கு உகந்ததாகக் கருதப்படுகிறது. புதுமனை புகுவிழாவின் போது, பசு மாட்டையும், அதன் கன்றையும் அந்த புது வீட்டினுள் அழைத்துச் செல்வர். மகாலட்சுமியே தன் வீட்டிற்கு வந்ததாக ஒரு நம்பிக்கை. மக்களுக்குத் தேவையில்லாததைப், பசு பெற்றுக் கொண்டு, மக்களுக்கு தேவையானப் பாலை அது தருகிறது. பசுவின் பால் குழந்தைகளுக்கு சிறந்த உணவாகும். பசு தரும் பால், தயிர், நெய், வெண்ணெய் முதலிய அனைத்து பொருள்களும் மனிதர்களுக்கு உபயோகப்படுகிறது. தினமும் நாம் நெற்றியில் அணியும் திருநீறும், பசுவின் சாணத்தில் இருந்தே பெறப்படுகிறது. நாம் மற்றவர்களுக்கு உதவியாக வாழ வேண்டும் என்பதையும் அது கற்றுத் தருகிறது. பசுவை நிறுத்தி கோ பூஜை செய்து வழிபடுகிறோம். பசு சுயநலம் இல்லாமல் எல்லாவற்றையும் மற்றவர்களுக்காக அளிக்கிறது. பசு மண்ணில் புதைந்து இருக்கும் இறைவனை அடையாளம் கண்டு, அந்த இடத்தில் பாலைப் பொழியும் என்பதை பக்திஇலக்கியத்தின் மூலம் அறிய முடிகிறது. ஏனைய உயிரினங்களை விட, பசு தன் கன்றின் மேல் அதிகமாகவே பாசத்தை பொழியும். ஒரு தாய்க்கும், மகனுக்கும் உள்ள உறவுக்கு உவமை கூறும் போது, பசுவும், கன்றும் உவமையாக சொல்லப்படுகிறது.கம்பராமாயணத்தில் பசுவும், கன்றும் குறித்து கம்பர் கூறியுள்ள கருத்துக்களை ஆராய்வோம்.*

## *பசுவைக் கண்ட கன்று*

*மன்னன் தசரதன் அழைத்த செய்தியை சுமந்திரன், இராமனிடம் சொல்ல, இராமன் தந்தையைக் காண கைகேயி இருக்கும் கோயில் புகுகின்றான். மன்னனைத் தேடிக்கொண்டே உள்ளே செல்லும் இராமனின் எதிரே கைகேயி வருகின்றாள். அவளைக் கண்டதும், இராமன் தலை தரையில் பட ஒரு கையால் வாய்ப்புடைத்து, மற்றொரு கையை மடக்கி வணங்கி நிற்கின்றான். அக்காட்சியைக் கம்பர் மேய்ச்சலுக்குப் பின் மாலை வீடு வந்து அடையும் தாய்ப் பசுவைக் கண்ட கன்றினைப் போன்று தாய் கைகேயியைக் கண்டு துவண்டு நின்றான் இராமன் என்று கூறுகிறார்.*

*''வந்தவள் தன்னைச் சென்னி மண்உற வணங்கி வாசச்*
*சிந்துூரப் பவளச் செவ்வாய் செங் கையின் பதைத்து மற்றைச்*
*சுந்தரத் தடக் கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்*
*அந்தி வந்து அடைந்த தாயைக் கண்ட ஆன் கன்றின் அன்னான்''*

*(கைகேயி சூழ்வினைப்படலம் 285)*

*இரண்டு கன்றிக்கு இரங்கும் ஓர் ஆ*

*இராமனுக்கு முடி சூட்டி ஆட்சியை அவனிடம் ஒப்புவித்துவிட்டு தவம் செய்யக் காட்டுக்குச் செல்ல விரும்புவதாக தசரதன் மந்திர கிழவர்களிடம் கூறுகிறான். இந் நிலையில் அவர்கள் 'இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆ' என இருந்தார்.*

*"திரண்ட தோளினன் இப்படிச் செப்பலும் சிந்தை*
*புரண்டு மீதிடப் பொங்கிய உவகையர் ஆங்கே*
*வெருண்டு மன்னவன் பிரிவு எனும் விம்முறு நிலையால்*
*இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆ என இருந்தார்"*

*(மந்திரப்படலம் 31)*

*இராமன் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கப் போகிறான் என்பதை அறிந்ததும் மகிழ்ச்சி. அதை வேளையில் தசரதனைப் பிரிய நேருமே என்பதை உணரும்போது ஆழ்ந்த துயரம். இரண்டினையும் ஒருங்கே புலப்படுத்தும் வகையில் இரண்டு கன்றிக்கு இரங்கும் ஓர் ஆ என இருந்தனர் என்று கம்பர் குறிப்பிடுகிறார்.*

*கன்றைப் பிரிந்த தாய்ப் பசு*

*மழைக் குன்றம் அனையான் மௌலி கவிழ்த்தனன் வரும் என்று தழைக்கின்ற உள்ளத்தினராக இருந்த கோசலையின் முன் தமியனாய் சென்ற இராமன், கைகேயி தந்தையிடம் பெற்ற வரத்தால் 14 ஆண்டுகள் தான் கான்புக வேண்டும் என்பதை சொல்கிறான். இதைக் கேட்ட அளவில் தாய் கோசலை கன்றைப் பிரிந்த தாய்ப் பசுவை போல கலங்கி நின்றாள்.*

*"அறம் எனக்கு இலையோ எனும் ஆவி நைந்து*
*இறவு அடுத்தது என் தெய்வதங்காள் எனும்.*
*பிற உரைப்பது என் கன்று பிரிந்திழிக்*
*கறவை ஒப்பக் கரைந்து கலங்கினாள்"*

*(நகர்நீங்கு படலம் 305)*

*இராமனும், இலட்சுமணனும் விடை பெற்றுக் கொள்ளும் முறையில் சுமித்திரையை வணங்கினர். சுமித்திரையும், இரண்டு கன்றுகளை விட்டுப் பிரிந்து நடுங்கும் தாய்ப்பசுவைப் போல மனம் கலங்கிப் புலம்பினாள். தமக்கு ஒப்பில்லாத அவ்விருவரும் தம்முடைய இடைகளில் உடுத்திய அழகிய ஆடைகளை நீக்கிவிட்டு, மரவுரியை அணிந்து கொண்டு வெளியே சென்றனர்.*

*"இருவரும் தொழுதனர் இரண்டு கன்று ஒரீஇ*
*வெருவரும் ஆவினின் தாயும் விம்மினாள்*
*பொரு அருங் குமரரும் போயினார் புறம்*
*திரு அரைத் திகில் ஒரீஇ சீரை சாத்தியே"*

*(நகர்நீங்கு படலம் 440)*

*இராமனுக்கு அஞ்சி கைகேயியைக் கொல்லாது பரதன் விட்டான். சிறிதளவும் பொய்த்தல் இல்லாத அரசனை உன் வாய்ச் சொல்லாகிய வரத்தினால் உயிரோடு ஒழித்தும், அதனால் என்றும் நீங்காத பழியைப் பெற்றும், இந்த அரசினை அடைந்து, எப்போதும் நீயே நல்வாழ்வு வாழ விரும்பினாய். இராமன் காட்டுக்குச் செல்லும் போது, நாட்டு மக்கள் அனைவரும் கன்றுகளும் அவற்றைப் பிரிந்த தாய்ப்பசுவும் போலத் திகழ்ந்ததைக் கண்ட பிறகும் உனது தீய எண்ணத்தை விடாமல் இருக்கிறாய் என்று கூறினான்.*

*"ஒன்றும் பொய்யா மன்னனை வாயால் உயிரோடும்*
*தின்றும் தீரா வன் பழி கொண்டீர் திரு எய்தி*
*என்றும் நீரே வாழ உவந்தீர் அவன் ஏக*
*கன்றும் தாயும் போல்வன கண்டும் கழியீரே"*

*(பள்ளிப்படைப் படலம் 859)*

*தாயை நோக்கும் கன்றின் பார்வை*

*இராமன் வீதிவழியே வந்தபோது ஆடவர் அனைவரும் தாய்ப்பசுவை நினைத்த கன்றைப்போல மனம் மகிழ்ந்தனர்.*

*"ஆயது அவ்வழி நிகழ்தர ஆடவர் எல்லாம்*
*தாயை முன்னிய கன்று என நின்று உயிர் களிப்ப"*

*(மந்திரப்படலம் 57)*

*என தசரதன் இருந்த இடத்திற்குச் சென்ற இராமனைக் கண்ட மக்களின் உணர்வைக் காட்டுகிறான்.*

*இராமன் தண்டகாரண்யத்துக்கு வந்ததைக் கண்ட முனிவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். அம்முனிவர்கள் நெருப்புப் பற்றி எரியும் காட்டில் விட்டு நீங்கிய ஒப்பற்ற தாய்ப் பசு மீண்டும் வர, அதனைக் கண்ட இளம் கன்றின் நிலையை அடைந்தார்கள். தண்டகாரணியத்து முனிவர்கள், அரக்கர்கள் தரும் இன்னலில் வருந்தி வாழ்ந்து வந்தனர். இராமன் வரவைக் கண்ட அம்முனிவர்கள்*

*"தீவரு வனத்திடையிட்டு தீர்ந்தது ஓர்*
*தாய் வர நோக்கிய கன்றின் தன்மையர்"*

*(அகத்தியப்படலம் 120)*

*மகிழ்ந்தனர்.*

*பசுவானது கன்று தனியே வருவதைப் பார்த்தது*

*வீரனாகிய இராமன் மின்னலை ஒத்த தேரின் மீது ஏறி வரும்போது, பசுவானது தனது ஒப்பற்ற கன்று தனியே தள்ளி வருதலைப் பார்த்தபோது, அன்பினால் கரைகின்ற மனத்தொடு உருகும் உவகை போல உடம்பு நெகிழ்ந்து மனம் உருகி நின்றனர். இராமனைக் கண்ட எல்லோரும் தம்மை அறியாமல் அவன் மீது அன்பு தோன்றி உடலும், உள்ளமும் உருகி நிற்பர்.*

*"தன் பொருஉ இல் கன்று தனி தாவி வரல் கண்டாங்கு*
*அன்பு உருகு சிந்தைடும் ஆ உருகுமா போல்*
*என்பு உருகி நெஞ்சு உருகி யார் உருக்கில்லார்"*

*(கைகேயி சூழ்வினைப்படலம்275)*

*கன்றினைப் பிரிந்த பசு அந்த கன்று தானே வருதலைப் பார்த்தது*

*அயோமுகியின் சூழ்ச்சியினால் இலட்சுமணனைக் காணாமல் இராமன் வருந்தினான். மீண்டு வந்த இலட்சுமணனைக் கண்ட இராமன் இழந்த கண்கள் மீண்டும் வந்தது போன்ற மகிழ்ச்சி உடையவனாக, ஈன்ற தன் இளமையான கன்றினைப் பிரிந்து வருந்தி நின்று அதை ஆற்றிக் கொள்ளாமல் ஒலி செய்யும் நிலையில் அந்தக் கன்று தானே வர, அக்கன்றைக் கண்ட மகிழ்ச்சியாலும், பாசத்தாலும் பால் வெளிப்பட்டுச் சுரக்கின்ற மடியை உடைய பசுவினது தன்மையை உடையவன் ஆனான்.*

*"ஊற்று ஊறு கண்ணின் நீர் ஒழுக நின்றவன்*
*ஈற்று இளம் கன்றினை பிரிவுற்று ஏங்கி நின்று"*

*(அயோமுகிப் படலம் 1108)*

*பிரிந்து சென்று மீண்டு வந்த கன்றைப் பார்த்த பசு*

*14 வருடங்கள் வனவாசம் முடிந்து இராமன் அயோத்தி வந்தான். இராமன் வருகையால் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். அன்னையருக்கெல்லாம் பிரிந்து சென்று மீண்டு வந்த கன்றைப் பார்த்தப் பசு எத்தனை மகிழ்ச்சி அடையுமோ, அத்தனை மகிழ்ச்சி உண்டாயிற்று. உடலை விட்டு நீங்கிய உயிர் மீண்டும் உடலில் வந்து பொருந்தியது போல பிரிந்த இராமனைக் கூடிய அனைவரும் மகிழ்ந்தனர்.*

*"தாயர்க்கு அன்று சார்ந்த கன்று எனும் தகையன் ஆனான்*
*மாயாயின் பிரிந்தோர்க் கெல்லாம் மனோலயம் வந்தது ஒத்தான்*
*ஆய் இளையார்க்குக் கண்ணுள் ஆடும் இரும் பாவை ஆனான்*
*நோய் உறுத்து உலர்ந்த யாக்கைக்கு உயிர் புகுந்தது ஒத்தான்"*

*(மீட்சிப்படலம் 4211)*

*கன்றைக்கண்டு ஆனந்தப்படும் தாய் பசு*

*வனவாசம் முடிந்து திரும்பி வந்த இராமன் அன்னையரை வணங்கிப் பரதனைத் தழுவி நின்றான். இராமனின் தாமரை திருவடிகளை வணங்கி எழுந்த பரதன், ஒன்றும் பேச இயலாதவன் ஆனான். இராமனோ, தம்பியைத் தழுவும் போது, அவனது கண்களில் இருந்து அருவி விழுந்தது*

*போல், கண்ணீர் கொட்டியது. தன் இளமை நலமெல்லாம் ஜடாமுடியுடன் நந்தியம்பதியில் 14 ஆண்டு காலம் தவம் இயற்றிய பரதனின் கற்றைச் சடையைத் தன் கண்ணீரால் நீராட்டிய இராமன், கன்றைக் கண்டு ஆனந்த படும் தாய்ப் பசு போல ஆனான்.*

*"தழுவினன் நின்ற காலை தத்தி வீழருவி சாலும்*
*விழ மலர்க் கண்ணீர் மூரி வெள்ளத்தால் முருகின் செவ்வி*
*வழுவுற பின்னி மூசு மாசுண்ட சடையின் மாலை*
*கழுவினன் உச்சி மோந்து கன்று காண் கறவை அன்னான்"*

*(மீட்சிப்படலம் 4220)*

கன்று இறந்துபோக வருந்தும் தாய்ப்பசு

*அதிகாயன் இறந்த செய்தியை அறிந்த தான்யமாலி, இராவணனிடம், இந்திரனுக்குத் தோற்காத சிறந்த புதல்வனை இவள் பெற்றெடுத்தாள் என்று தேவர்களும் போற்றுவர்..அவனுக்குச் சமமாகாத ஒருவன் இட்ட அம்புக்கு இரையாகக் கொடுத்துவிட்டேனே. அக்ககுமரன், முன்பே இறந்து விட்டான். அதிகாயன் இப்போது இறந்தான். உன் புதல்வர்களில் இன்று உயிரோடு இருப்பவன் மண்டோதரி மகன் இந்திரஜித்தனே. இனி திசைகள் தோறும் சென்று வெற்றி பெறுவாயோ? சீதையால் இதுவரை வந்த துன்பங்கள்போக இன்னும் வரயிருப்பவை சிலவோ? அவை மிகப்பலவாகும். .உன் தம்பி கும்பகர்ணன் நல்லுரையை நீ ஏற்கவில்லை. வீடணன் சொல்லையும் கேட்கவில்லை. இவ்வாறு பற்பலவற்றைத் தொடர்ந்து கூறி குரல் உயர்த்திக் கூவித், தன் கன்று இறந்துபோகத் தான்மட்டும் உயிர்ப் பிழைத்திருக்க நேர்ந்த தாய்ப்பசுவைப் போலக் கவலை கொண்டாள் தான்யமாலி.*

*"என்று பலபலவும் பன்னி எடுத்து அழைத்து*
*கன்று படப் பிழைத்த தாய்போல் கவல்வாளை*
*நின்ற உருப்பசியும் மேனகையும் நேர்ந்து எடுத்துக்*
*குன்று புரையும் நெடுங் கோயில் கொண்டு அணைந்தார்"*

*(அதிகாயன் வதைப்படலம் 1941)*

*தாயை இழந்த கன்று போல்*

*இந்திரசித் மாயா சீதையை உருவாக்கி அவளைக் கொன்றான். அதை உண்மை என்று எண்ணிய இராம லட்சுமணர்கள் பதறினர். தம்பி இலட்சுமணனும் நாயகனான இராமன் மூர்ச்சையுற்ற நிலையைக் கண்டும், தமக்கு நேர்ந்த இகழ்ச்சியை நோக்கியும், கைக் கூடி வந்த காரியம் மறுபடியும் அழிவுற்ற தன்மையை உணர்ந்தும், வாயும், மனமும் கண்ணும் உடலும் அயர்ந்து விழுந்து, தாயை இழந்த கன்று போல் இலட்சுமணன் தரையில் சாய்ந்தான்.*

*"நாயகன் தன்மை கண்டும் தமக்கு உற்ற நாணம் பார்த்தும்*
*ஆயின கருமம் மீள அழிவுற்ற அதனைப் பார்த்தும்*
*வாயொடு மனமும் கண்ணும் யாக்கையும் அயர்ந்து சாம்பித்*
*தாயினை இழந்த கன்றின் தம்பியும் தலத்தன் ஆனான்"*

*(மாயா சீதைப் படலம் 2839)*

*பரதன் தன் மேல் தவறில்லை என்பதை நிரூபிக்கக் கோசலையிடம், சபதம் செய்தபோது பால் குடிக்காமல் கன்று இறக்கும்படி தாய்ப்பசுவின் பாலை முற்றிலும் கறந்து குடித்தவன் செல்லும் நரகத்தை நான் இப்போதே சேர்வானாக என்றான்.*

*"கன்று உயிர் ஓய்ந்து உகக் கறந்து பால் உண்டோன்*
*……………………………………..*
*என்று இவர் உறு நாகு என்னது ஆகவே"*

*(பள்ளிப்படைப் படலம் 887)*

*தாயைத் தெரிந்து கொள்ளாத கன்றுகள் இல்லை*

*விராதன் சாபம் நீங்கப் பெற்று இராமனைப் பலவாறாக வணங்கினான். பக்தர்களிடம் வருவதற்கு அரியவன் போல் தோன்றி, பிறகு எளிதாக வந்து காட்சி தரும் வல்லமை உள்ளவனே, தன்னைப் பெற்ற தாயைத் தெரிந்து கொள்ளாத கன்றுகள் இல்லை. தான் பெற்ற கன்றுகளைத் தாயும் அறிந்து கொள்ளும். உன்னுடத்தே உலகம் தோன்றியதால் நீ உலகத்தின் தாயாக விளங்கி,*

எல்லாப் பொருள்களையும் அறிகிறாய். ஆனால் அப்பொருள்கள் எல்லாம் உனது கனிவான நிலையை அறியமாட்டா என்றெல்லாம் கூறி இராமனை வணங்கினான்.

"தாய் தன்னை அறியாத கன்று இல்லை தன் கன்றை
ஆயும் அறியும் உலகின் தாய் ஆகி ஐய
நீ அறிதி எப் பொருளும் அவை உன்னை நாலை அறியா
மாயா இது என்கொலோ வாராதே வர வல்லாய்"

(விராதன் வதைப்படலம் 540)

கன்றினைப் பிரிந்த காராம் பசு

கங்கை காண் படலத்தில் பரதன் கூறியதைக் கேட்ட குகன், அந்தக் கோசலையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அழுதான். அங்ஙனம் அழுத குகனைச் சுட்டிக்காட்டி, 'இவன் யார்? என்று கன்றினைப் பிரிந்த காராம் பசுவினைப் போன்ற அக்கோசலை பரதனிடத்தில் வினவினாள். அதற்கு பரதன் அன்னையே ஆடவரில் சிறந்தவனாகிய இவன் இராமபிரானுக்கு இனிய நண்பன். எங்களுக்கு மூத்தவன். குகன் என்னும் பெயரையும் உடையவன் என்றான்.

"என்றலுமே அடியின்மிசை நெடிதுவீழ்ந்து
அழுவானை இவன்யார் என்று
கன்று பிரி காராவின் துயர் உடைய
கொடி வினவ கழல் கால் மைந்தன்"

(கங்கை காண் படலம் 1049)

கன்றை உடைய பசுக் கூட்டம்

நாளை இராமனுக்கு பட்டாபிசேகம் என்பதை அறிந்த கோசலை, திருமால் கோவிலுக்குச் சென்று அவருக்குப் பொருந்திய நான்கு வேதங்கள் கூறும் பூசைகளைச் செய்தாள். அதன் பின்னர் அங்கிருந்த சிறந்த தவசிகளுக்கெல்லாம் கன்றை உடைய பசுவின் கூட்டத்தைத் தானமாகத் தந்தாள்.

"நன்று இழைத்து அவண் நல்ல தவர்க்கு எலாம்
கன்றுடையப் பசுவின் கடல் நல்கினாள்"

(மந்திரப் படலம் 94)

கன்றினுக்கு பால் தர மறந்த பசு

இராமன் காடு சென்றதால் யானைகள் நீர் பருகாமல் இருந்தன. குதிரைகள் புல் மேய்தலையும் மறந்தன. பறவைகள் தம் குஞ்சுகளுக்கு இரைதேடி ஊட்டவில்லை.பசுக்கள் தம் கன்றுகளுக்குப் பால் ஊட்டவில்லை.

"ட்டில களிறு கை நீரின் வாய் புதல்
பூட்டில புரவிகள் புள்ளும் பார்ப்பினுக்கு
ஈட்டில இரை புனிற்று ஈன்ற கன்றையும்
ஊட்டில பறவை நைந்து உருகிச் சோர்ந்தவே"

(நகர்நீங்கு படலம் 498)

பசுவும் கன்றும்

இராவணன் தன் கையில் உள்ள வேலை வீடணன் மேல்எறிய, அதைத் தான் ஏற்றான் இலட்சுமணன். அதைக் கேள்விப்பட்ட இராமன், ஒரு புறாவைக் காத்தற் பொருட்டாக உடல் புண்படுமாறு அறுத்துக் கூறு செய்த தெய்வத்தன்மை பொருந்திய அறத்தின் வடிவமான சிபிச்சக்கரவர்த்தியும், ஐய நினக்கு நிகராக மாட்டான். அந்த வரலாற்றுக்கு அப்பால் சிறந்த வேறொரு செயலை உரைப்பது எதற்காக? பெருங்கருணையுடையவர் எனப்படுவர் தம்மைச் சார்ந்தவர்க்குத் துன்பம் உண்டாகக் காண்பாரானால், பசுவும், கன்றும் போன்றவர் ஆவார் என்று உரைத்தான்.

"புறா ஒன்றின் பொருட்டின் யாக்கை புண்ணுற அரிந்த புத்தேள்
அறவனும் ஐய நின்னை நிகர்கிலன் அப்பால் நின்ற
பிறவினை உரைப்பது என்னே பேர் அருளாளர் என்பார்

*கறவையும் கன்றும் ஒப்பார் தமர்க்குஇடர் காண்கில் என்றான்''*
*(வேல்ஏற்றப்படலம் 3519)*

*கன்றையீன்ற பசுக்கள்*

*கார்காலப் படலத்தில் மழை பெய்யப்பெற்றபூமி பசும்புற்களை உண்டாக்கிக் கொடுக்க, அவற்றை, நிறைய மேய்ந்து தெவிட்டிய கன்றையீன்ற பசுக்கள் பலவிடங்களிலும் தோன்றிய காளான்களைக் கால்களால் இடறித் தள்ளின. அங்ஙனம் இடறப் பெற்ற காளான்கள் கட்டித் தயிர் போலத் தோன்றின. பிடவம் என்ற செடியின் பூக்கள், தேன் போன்ற சொற்களையுடைய, கோங்கின் அரும்பு போன்ற முலைகளையுடைய இடைக் குலப் பெண்கள் குடங்களில் கறந்த பாலினின்று மேலே வழியும் நுரையைப் போல விளங்கின.*

*''பொழிந்த மா நிலம் புல் தரக் குமட்டிய புனிற்றா*
*எழுந்த ஆம்பிகள் இடறின செறி தயிர் ஏய்ந்த*
*பொழிந்த தேனுடை முகிழ் முலை ஆய்ச்சியர் முழவில்*
*பிழிந்த பால் வழி நுரையினைப் பொருவின பிடவம்''*
*(கார்காலப்படலம் 486)*

*கன்று பிறரிடம் அகப்பட்டதைக் கண்ட பசு*

*அனுமனை, இந்திரசித் பிரம்மாத்திரத்தால் சிறை பிடித்து விட்டான் என்பதை அறிந்த சீதை துயரம் ஆற்றாது பலவாறாகப் புலம்பினாள். நெருப்பையும் சுட்டுப் பொசுக்கும் ஒப்பற்ற கற்பு என்னும் தீயைப் பெற்றுள்ள சீதை இத்தன்மையான சொற்களைச் சொல்லி தன் உயிர் வலிமை இழக்கக் கன்று பிறரிடம் அகப்பட்டுக் கொண்டதால் துன்பம் அமைகின்ற தாய்ப் பசுவைப் போலத் தளர்ச்சியுற்று மயக்கம் அடைந்தாள்.*

*''ஏய பன்னினள் இன்னன தன் உயிர்*
*தேய கன்று பிடியுறத் தீங்கு உறும்*
*தாயைப் போலத் தளர்ந்து மயங்கினாள்*
*தீயைச் சுட்டது ஓர் கற்பு எனும் தீயினாள்''*
*(பிணிவீட்டுப்படலம் 1080)*

*கன்றினைப் பெற்ற காராம் பசு*

*'சுட்டி' எனும் அணியை சீதையின் நெற்றியிலே ஒளி வீசும் படி தொங்கவிட்டனர். சந்திரன் என்னும் கன்றினைப் பெற்ற காராம் பசு அதன் மேனியை நக்கும் பொருட்டு, அதன் பக்கத்தில் நாக்கை நீட்டுவது போல, நெருங்கிய இருண்ட முன்னெற்றியை ஒட்டிய கூந்தல் பகுதியிலே 'பூட்டு' என்னும் ஆபரணத்தை தோழியர் அணிவித்தார்கள்.(கோலம் காண்படலம் 1068)*

*பசுக்களைத் தானம் தந்த இராமன்*

*சீதையைத் திருமணம் செய்ய இராமன் அலங்காரம் செய்தப் பின்,பல பதினாயிரம் பசுக்களையும்-பசும்பொன்னையும்-அளவற்ற நிலங்களையும்-நவமணிகள் அனைத்தையும் நல்லொழுக்கம் உடையவர்களுக்கு தானம் தந்தான்.(கடிமணப்படலம் 1175)*

*இராமன் நான்கு மறைகளில் வல்ல அந்தணர்களுக்கெல்லாம் மணிகளுடன் முத்துக்களும், பொன்னும் நிறைந்த வளத்தையுடைய நிலத்தையும், கறவைப் பசுக்களையும் அதிகமாக மேலும் மேலும் தந்தான்.(விடை கொடுத்த படலம் 4287)*

*சிங்கமும் யானையும் மலை காடுகளில் வாழ்வன இயல்பாகவே தமிழ் பகை கொண்டன இவை கலந்து உறவாடுதலுடன் முல்லை நிலத்தில் வாழும் இடையர் வீடுகளில் உள்ள பசுவின் கன்றுகளோடும் உறவாடுகின்றன என்று கம்பர் குறிப்பிடுகிறார்*

*''குன்று உறை வயமாவின் குருளையும் இருள் சிந்திப்*
*பின்றினது எனல் ஆகும் பிடி தரு சிறு மாவும்*
*அன்றில பிரிவு ஒல்லா அண்டர்தம் மனை ஆவின்*
*கன்றொடு விளையாடும் களியன பல காணாய்''*
*(வனம்புகு படலம் 690)*

இராமன் காடு செல்வான் எனக் கேட்ட மக்கள் அழுது புலம்பி கண்ணீர் விட்டு, துக்கமான சோகத்தில் ஆழ்ந்தனர். இத்தகைய சோக நிகழ்ச்சியை நகர் நீங்கு படலத்தில் கம்பர்

"ஆவும் அழுத அதன் கன்றும் அழுத அன்றளர்ந்த
பூவும் அழுத புனல் புல் அழுத கள் ஒழுகும்
காவும் அழுத களிறு அழுத கால்வயப் போர்
மாவும் அழுத அம்மன்னவனை மானவே"

*(நகர்நீங்கு படலம் 390)*

உயிர் உள்ள பசு பசு கன்று அழுததை கம்பர் குறிப்பிடுகிறார்.

முடிவுரை

ஒரு தாய்க்கும், மகனுக்கும் உள்ள உறவுக்கு, அன்புக்குரிய உறவுக்கு உவமை கூறும் போது, பசுவும் கன்றும் உவமையாகச் சொல்லப்படுகிறது. கைகேயியைக் கண்ட இராமன், தாய்ப் பசுவைக் கண்ட கன்று போன்று சந்தோஷம் அடைந்தான். தசரதன் துறவு மேற்கொள்ள, இராமன் முடிசூட இதற்கு தசரதனின் அவைக் கிழவர்கள் இரண்டு கன்றினிக்கும் இரங்கும் ஆப்போல இறங்கினர். இராமன் வனம் செல்லப் போகிறான் என்பதை அறிந்த கோசலை கன்றைப் பிரிந்த தாய் பசுவைப் போலக் கலங்கி நின்றாள். முனிவர்கள் இராமனையேத் தாயை நோக்கும் கன்றினைப் போல பார்த்தார்கள். பசுவானது கன்று தனியே வருவதை பார்த்து உள்ளம் உருகி நிற்பார். இலட்சுமணனைக் காணாததால் வருத்தம் அடைந்திருந்த இராமன் முன் அவன் வர இராமனுக்கு கன்றினைப் பிரிந்த பசு, அந்தக் கன்று தானே வருதலைப் பார்த்தது போல மகிழ்ந்தான். வனவாசம் முடிந்து திரும்பி வந்த இராமனைக் கண்ட அன்னையர் கன்றைக் கண்டு ஆனந்தப்படும் தாய்ப் பசுவின் நிலையை அடைந்தார்கள். அதிகாயன் இறந்த செய்தியை அறிந்த தான்யமாலி, கன்று இறந்து போக வருந்தும் தாய்ப் பசுவைப் போல வருந்தினாள். மாயா சீதை வெட்டப்பட்டதை அறிந்த இலட்சுமணன் தாயை இழந்த கன்று போலக் கதறினான். இராமனை, விராதன் தாயைத் தெரிந்து கொள்ளாத கன்றுகள் இல்லை என்று கூறி ஆனந்தப்படுகிறான். இராமனுக்கு பட்டாபிஷேகம் என்பதால், கோசலைக் கன்றை உடைய பசு கூட்டங்களை அந்தணர்களுக்குத் தானம் அளித்தாள். அனுமனை, இந்திரசித் பிரம்மாஸ்திரத்தினால் பிடித்ததை அறிந்த சீதை கன்று பிறரிடம் அகப்பட்டதைக் கண்ட பசு போல தளர்ச்சியோடு மயக்கமடைந்தாள். இவ்வாறு பசுவும் கன்றும் தொடர்பான செய்திகளைக் கம்பராமாயணத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

துணைநூற்பட்டியல்


1. இராமன் பன்முகநோக்கில், அ.ச.ஞானசம்பந்தன்,சாரு பதிப்பகம், சென்னை,2016.
2. காலமும் கணக்கும் நீத்த காரணன் கம்பன், கட்டுரைத் தொகுப்பு, (பதிப்பாளர்கள் பழ.பழனியப்பன், சொ.சேதுபதி) கபிலன் பதிப்பகம் புதுச்சேரி, சென்னை.
3. கம்பன் புதிய தேடல், அ.அ. ஞானசந்தரத்தரசு,தமிழ்ச்சோலைப் பதிப்பகம், புதுக்கோட்டை, 2012.
4. எல்லைகள் நீத்த இராமகாதை, பழ.கருப்பையா, விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர், 2008.
5. கவிச்சக்கரவர்த்தி கம்பன் ஒரு பார்வை, தமிழ்நேசன்,வள்ளிபதிப்பகம், சென்னை,2019.
6. பூவண்ணன், கம்பராமாயணம் மூலமும் தெளிவுரையும் தொகுதி 1, 2, 3, 4, 5,6,7, 8 வர்த்தமானன் வெளியீடு, சென்னை, 2011.
7. செல்வம்.கோ,கம்பன் புதையல், சாரு பதிப்பகம், சென்னை 2016.


********* ********* ********** ********* ********* ********** ********** **********